# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 22.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- அஞ்சலகங்களில் **செல்வ மகள் சேமிப்பு** கணக்கு தொடங்குவதில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
    - பெண் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக **‘சுகன்யா சம்ரிதி யோஜனா’**(செல்வ மகள் சேமிப்பு கணக்கு திட்டம்) என்ற சிறுசேமிப்பு திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி 2015ம் ஆண்டு ஜனவரி 22ம் தேதி தொடங்கி வைத்தார்.
    - நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் 15.95(ஜுன் 30 வரை) இலட்சம் செல்வ மகள் சேமிப்பு கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.
    - தமிழகத்துக்கு அடுத்தப்படியாக உத்திரப் பிரதேசம் 15.09 லட்சம் கணக்குகள் தொடங்கப்பட்டு 2-வது இடத்தில் உள்ளது.




## இந்திய நிகழ்வுகள்

- WHO (World Health Organization) – **புகையிலை ஒழிப்பு தின விருது – 2017**
    - புகையிலை கட்டுப்பாட்டிற்கான அசாதாரண பங்களிப்பு வழங்கியதற்காக டெல்லி அரசின் உடல்நல கூடுதல்

இயக்குநரான **எஸ்.கே. அரோராவிற்கு SK Arora** மதிப்புமிக்க புகையிலை ஒழிப்பு தின விருது – 2017 **World No Tobacco Day Award** வழங்கப்பட்டுள்ளது.

- ○ டெல்லியில் புகையிலை நோய்த் தாக்கமானது ஆறு வருடங்களில் 65 சதவீதம் குறைந்துள்ளது.

- குறிப்பு
  - ○ தேசிய சுகாதாரக் கொள்கை 2017- ஆனது, புகையிலை நோய் தாக்கத்தை 2020ல் 15 சதவீதம் அளவிலும், 2025ல் 30 சதவீதம் அளவிலும் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.



- நிகழ் நேரத்தில் ஏற்படும் இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்கான முதலாவது கருத்தரங்கை(**1st ever workshop to prevent Cyber Crime threat)** பஞ்சாப் மாநில காவல்துறையானது டெல்லியில் உள்ள தேசிய விமர்சனத் தகவல் கட்டமைப்பு பாதுகாப்பு மையத்துடன்(**National Critical Information Infrastructure protection centre)** இணைந்து நடத்தியுள்ளது.



- நமது பாதுகாப்பு, நமது உரிமைகள் - பிரச்சாரம்(**Our safety, our Rights - campaign**):
  - குழந்தைகளிடையே பாலின பிரச்சனைகளை அடையாளம் காண்பது மற்றும் புரிந்து கொள்வதற்கு உதவுவதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அம்னிஸ்டி இண்டர்நேஷனல் இந்திய அமைப்பானது **(Amnesty International India)** நமது பாதுகாப்பு, நமது உரிமைகள் எனும் பிரசாரத்தை தொடங்கியுள்ளது.
- குறிப்பு
  - இப்பிரச்சாரமானது பெண் குழந்தைகளுக்கான **சர்வதேச தினமான அக்டோபர் 11** அன்று முடிவுடையும்.

**உலக நிகழ்வுகள்**

- **கவுசர் போர் விமானம்(Kowsar)** - ஈரான் நாட்டு அரசானது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதி நவீன போர் விமானமான கவுசர் எனும் போர் விமானத்தை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.



- போராட்ட உணர்வுகளை குறைப்பதற்காகவும், நாட்டுப் பற்றை அதிகரிக்கும் வகையிலும், மக்களுக்கான உரிமைகள் மற்றும் பொறுப்புகளை புரிய வைக்கவும் **19 முதல் 25** வயதுக்கு இடையிலான ஆண் - பெண் இருபாலருக்கும் கட்டாயமாக ஓராண்டு

காலத்துக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் **சட்டமானது வடமேற்கு ஆப்பிரிக்கா** கண்டத்தில் உள்ள **மொராக்கோ** நாட்டின் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



**விளையாட்டு நிகழ்வுகள்**

- 18வது ஆசிய விளையாட்டு போட்டிகளில் **10மீ ஏர் பிஸ்டல்** துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவின் 16 வயது **சௌரப் சௌத்ரியும், அபிஷேக் வர்மாவும்** தங்கம், வெண்கலம் என முறையே இரு பதக்கங்களை வென்று சாதனைப் படைத்துள்ளனர்.
- **குறிப்பு**
  - இந்திய அணி இதுவரை 7 பதக்கங்களை (3 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம்) வென்றுள்ளது.



**நியமனங்கள்**

- ஜம்மு & காஷ்மீர் உட்பட இந்தியாவின் 7 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்
  - ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் புதிய ஆளுநராக பீகார் மாநில ஆளுநராக இருந்த சத்தியபால் மாலிக் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ள மற்ற மாநிலங்கள்**

**மாநிலம்** **ஆளுநர்**

| மாநிலம் | | ஆளுநர் |
|---|---|---|
| 1. பீகார் | - | லால்ஜி பான்டன் |
| 2. சிக்கிம் | - | கங்கா பிரசாத் |
| 3. மேகாலயா | - | ததகட்டா ராய் |
| 4. திரிபுரா | - | கே.எஸ். சோலாங்கி |
| 5. ஹரியானா | - | சத்திய தேவ் நாராயாண ஆர்யா |
| 6. உத்திரகாண்ட் | - | பேபி ராணி மரியா |

